# செலவு குறையுது.. வரவு கூடுது.. ஜெயிக்க வைக்கும் ஜீவாமிர்தம்!

**10.10.2012**




ஜீரோ பட்ஜெட் ‘விவசாயத்தின் முக்கிய இடுபொருட்கள்.. ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் ஆகிய இரண்டும்தான். விவசாயிகளே எளிதில் தயாரித்துக் கொள்ளக்கூடிய இந்த இடுபொருட்களை, ஜீரோ பட்ஜெட் விவசாயிகள் பயன்படுத்தி, கண்கூடாக பலன்களை உணர்ந்திருக்கிறார்கள். அத்தகையோரில், திருப்பூர் மாவட்டம், முத்தூர் மேட்டுக்கடை பகுதியைச் சேர்ந்த புரவிமுத்து – ஈஸ்வரி தம்பதிக்கும் இடமுண்டு. இவர்கள், மரப்பயிர்களுக்கு இந்த இடுபொருட்களைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

கல்லூரியில் படிக்கும்போதே இயற்கை மீது ஆர்வம் அதிகம். விடுமுறை விட்டால் காடு, மலை என்று சுற்றிக்கொண்டேயிருப்பேன். படித்து முடித்து விவசாயத்திற்கு வந்தேன். கொடுமுடி டாக்டர் நடராஜன் மூலமாக பஞ்சகவ்யா பற்றித் தெரிந்துகொண்டேன்.

தொடர்ந்து, நம்மாழ்வார் ஐயா, கூட்டங்களிலும் கலந்துகொண்டது மூலமாக இயற்கை வேளாண்மை பற்றியும் மரம் வளர்ப்பது பற்றியும் தெரிந்து கொண்டேன்.

**சிலிர்க்க வைத்த ஜீரோ பட்ஜெட்!**

அதன்பிறகு 10 ஏக்கர் நிலத்தையும் முழுக்க முழுக்க இயற்கைப் பண்ணையாக மாற்றிவிட்டோம். அந்த சமயத்தில் பசுமை விகடன் மூலமாக திண்டுக்கல்லில் நடந்த ஜீரோ பட்ஜெட் பயிற்சி வகுப்பில் நானும் மனைவியும் கலந்துகொண்டோம். சுபாஷ் பாலேக்கரோட ஜீரோ பட்ஜெட் சித்தாந்தம்.. எங்களை மிகவும் ஈர்த்தது. தொடர்ந்து ஈரோடு, கோவையில் நடந்த அவருடைய வகுப்பிலும் கலந்துகொண்டு பயிற்சி எடுத்துக் கொண்டோம். அதன் பிறகு எங்கள் பண்ணையை முழுவதுமாக ஜீரோ பட்ஜெட்டிற்கு மாற்றிவிட்டோம். முதல்படியாக கலப்பின மாடுகள் அத்தனையையும் விற்றுவிட்டு, நாட்டுமாடுகளை வாங்கினோம். இப்போது 6 நாட்டு மாடுகளும், 2 கன்றுக்குட்டிகளும் இருக்கு. அவைகளுடைய கழிவுகளை வைத்துதான் ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் என்று தயார் செய்து பயிர்களுக்குக் கொடுக்கிறோம்.

**மழை ஈர்ப்பு மையம்!**

இந்த 10 ஏக்கருக்கும் கிணற்றுப் பாசனம்தான். 5 ஏக்கரில் பென்சில், பெருமரம், வாகை, பூவரசு, மலைவேம்பு, காயா, மகோகனி, இலவு, வேம்பு என்று 2 ஆயிரம் மரங்கள் இருக்கு. அதையெல்லாம் நட்டு நான்கு வருடமாகிறது. 5 ஏக்கரில் சப்போட்டா, மா இருக்கு. இந்த மரங்கள் ஆறு வருடமாக பலன் கொடுத்து கொண்டிருக்கிறது. இந்தப் பண்ணைக்கு நாங்க 'கனிச்சோலை' என்று பெயர் வைத்திருக்கிறோம். மரங்கள் அதிகம் இருப்பதால் மழை ஈர்ப்பு மையமாகவும் இது இருக்கிறது. மழை பெய்யும் சமயத்தில் மற்ற இடத்தில் பெய்வதைவிட இங்கே கொஞ்சம் அதிகமாகவே பெய்வதை நாங்கள் கண் கூடாக பார்த்திருக்கிறோம். மரங்கள் நடவு செய்து 2 வருடம் வரைக்கும் வாரம் இரண்டு தண்ணீர் கொடுப்போம். ஒவ்வொரு முறையும் ஜீவாமிர்தத்தை பாசனத்தில் கலந்துவிடுவோம். அப்படிக் கொடுக்க ஆரம்பித்த ஒரு வருடத்திலேயே மண் பொலபொலப்பாகி, ஈரப்பதம் அதிகமானது. பாலேக்கர் சொன்னது மாதிரியே மண்ணிற்கு அடியிலிருந்த மண்புழுக்கள் எல்லாம் மேலே வர ஆரம்பித்தது. வறட்சியில் கூட மரங்கள் வாடிப் போவதில்லை. 3 –ம் வருடத்திலிருந்து 15 நாளைக்கு ஒரு முறை ஜீவாமிர்தம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**ஊட்டம் கொடுக்கும் ஜீவாமிர்தம்!**

ஜீவாமிர்தத்தைவிட அதிக வீரியமாக செயல்படுவது, கனஜீவாமிர்தம். பொதுவாக, மானாவாரி விவசாயத்தில்தான் இதைப் பயன்படுத்துவாங்க. ஆனால், நாங்க எங்க தோட்டத்திலிருக்கும் மரங்களுக்கும், பழப்பயிர்களுக்கும் மாதம் ஒரு முறை அரை கிலோ கனஜீவாமிர்தம் கொடுக்கிறோம். வறட்சியால் பாதிப்பு, வேர் சம்பந்தமான நோய்கள் என்று எதுவும் பாதிக்காமல் தடுத்து, மரங்களுக்கு ஊட்டம் கொடுப்பது கனஜீவாமிர்தம்தான்.

**பூச்சிகள் தொல்லை இல்லை!**

பழப்பயிர்களுக்கும் ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் இரண்டையும் 15 நாள் இடைவெளியில் மரத்திற்கு 5 லிட்டர் வீதம் கொடுக்கிறோம். பூக்கும் பருவத்தில் 10 லிட்டர் தண்ணீரில் 2 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலைக் கலந்து மரங்கள் மேல் தெளிப்போம். இதனால் பிஞ்சுகள் உதிராமல், சேதாரம் இல்லாமல் காய்த்து பழுத்து பலன் தருகிறது. பழங்களை சேதப்படுத்தும் வெள்ளை ஈ, சாறு உறிஞ்சும் பூச்சிகள் அறவே வருவது இல்லை என்றார். ஜீரோ பட்ஜெட் விவசாயம் என்பதால் எங்கள் தோட்டத்தில் இருக்கும் வேலையை நாங்களே செய்திடுவோம். இடுபொருள் செலவும் இல்லை. ஆக எல்லாமே வரவுதான். பழமரங்கள் மூலம் சீசனுக்கு 50 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. 5 ஏக்கர் நிலத்தில் இருக்கும் மரங்களை 6 வருடத்திற்குப் பிறகு வெட்டும்போது குறைந்தபட்சம் 2,000 டன் தேறும். விறகுக்கு விற்றால் கூட டன்னிற்கு 3 ஆயிரம் ரூபாய் என்று இப்போது இருக்கும் நிலவரப்படி 60 லட்சம் ரூபாய் வருமானம் நிச்சயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார். இப்படித்தான் தயாரிக்கணும்... ஜீவாமிர்தம் தண்ணீர் – 200 லிட்டர், நாட்டு மாட்டுச் சாணம் – 10 கிலோ, மாட்டுச் சிறுநீர் – 10 லிட்டர், நாட்டுச் சர்க்கரை – 2 கிலோ, முளைக்கட்டிய பயறு மாவு – 2 கிலோ ஆகியவற்றோடு ஒரு கைப்பிடி அளவு ஜீவனுள்ள நம் தோட்டத்து மண் ஆகியவற்றை ஒரு தொட்டியில் போட்டு கலக்க வேண்டும். தொட்டி நிழலில் இருக்க வேண்டும். தொட்டிக்குள் பூச்சி, பொட்டு விழாமல் இருக்க மூடி வைக்க வேண்டும். தினம் மூன்று முறை இந்தக் கரைசலை கடிகாரச் சுற்றுப்படி கலக்கி வந்தால், மூன்று நாட்களில் ஜீவாமிர்தம் தயார். இதை அனைத்துப் பயிர்களுக்கும் பாசன நீரோடு கலந்து பயன்படுத்தலாம். பூக்கும் தருவாயிலுள்ள பயிர்களுக்கு 10 லிட்டர் தண்ணீரில் 2 லிட்டர் ஜீவாமிர்தம் கலந்து, இலை வழி ஊட்டமாகத் தெளித்தும் விடலாம்.

**கனஜீவாமிர்தம்**

நாட்டு மாட்டுச் சாணம் – 100 கிலோ, மாட்டுச் சிறுநீர் – 10 லிட்டர், வெல்லம் – 2 கிலோ, சிறுதானிய மாவு – 2 கிலோ ஆகியவற்றை நன்றாகக் கலக்கி மண்தரையில் பரப்பி, நிழலில் உலர வைத்து, பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். தூளாக, உள்ள கன ஜீவாமிர்தம், பயன்படுத்த எளிதாக இருக்கிறது. உருண்டையாக பிடித்து வைத்தும் பயன்படுத்தலாம். தேவைப்படும் போது 10 லிட்டர் மாட்டுச் சிறுநீரை அதன் மீது தெளித்து, ஈரப்படுத்திக் கொண்டு பயன்படுத்தலாம். வருமானத்திற்கு வழி நாட்டு மாடுகளில் பால் குறைவாகத்தான் கிடைக்கும். கன்றுக்குட்டிகள் குடித்தது போக, வீட்டுத் தேவைக்கே அந்தப் பால் சரியாக போய்விடும். அதனால்.. இயற்கை இடுபொருள் தயாரிக்க மட்டுமே நாட்டு மாடு என்பது நெருடலாக இருந்தது. ஆனால், அதற்கும் பசுமை விகடன் மூலமாகவே மாற்று வழி கிடைத்தது. இப்போது நாட்டு மாடு வருமானம் கொடுக்கும் மாடாயிடுச்சு. சேலத்தில் இருக்கும் சுரபி கோசாலையில் நாட்டு மாடுகளோட கோமியம், சாணத்தைப் பயன்படுத்தி, அர்க், சாம்பிராணி, விபூதி, ஷாம்பூ, சோப்புக்கட்டி, கொசுவத்திகளைத் தயாரித்து விற்கிறார்கள் என்று பசுமை விகடன் ஒரு செய்தி வெளிவந்தது. அந்த கோசாலைக்குப் போய், தயாரிப்பு முறைகளைக் கற்றுக்கொண்டு வந்தோம். 2 வருமாக

நாங்களும் தயாரித்து விற்றுக்கொண்டிருக்கிறோம். இதன் மூலமாக மாதத்திற்கு 15,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அதனால் நாட்டு மாடுகளில் பால் வருமானம் இல்லையென்ற வருத்தம் சுத்தமாக போய்விட்டது. செம்மறி ஆட்டுக் குட்டிகளையும் வளர்த்து விற்றுக்கொண்டிருக்கிறோம் அதிலும் தனியாக வருமானம் கிடைக்கிறது.

**தொடர்புக்கு**

**புரவிமுத்து, செல்போன் : 99659-29098.**